முடிப்பதால் பயனுண்டா என்பதைக் குறித்த செயற்குறிப்பு கால்நடை இயக்கு நரின் ஆலோசனையில் உள்ளது. தகுதியான திட்டமிடுவதற்கு வழிமுறை இல்லாத காரணத்தால் அந்த ஆலோசனை கூட முற்றுப் பெறவில்லை.

Works of Local Library Authorities

* 161 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to expand the work of the Local Library Authorities; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (ஆ) இரண்டு நூலக ஆணைக்குழுக்கள்தாம் விரிவுபடுத்தக் கூடிய வாய்ப்பு வசதிகளைப் பெற்றிருக் கின்றன. இப்பொழுதுள்ள நிதி நிலைமையில் நூலக ஆணைக் குழுக்கள் தம்முடைய பணிகளைப் பெரிய அளவில் விரிவுபடுத்துகிற சூழ்நிலை ஏற்பட வில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஆணைக் குழுவினுடைய வேலைகளை விரிவு படுத்தும் நிலைமை இருந்தாலும்கூட, மதுரை போன்ற இடத்தில் உள்ள நூலகத்தில் கடந்த மூன்று ஆண்டுக் காலமாக எந்த விதமான புதுப் புத்தகங் களும் தருவிக்கப்படவில்லை. அம்மாதிரி முக்கிய கேந்திரமான இடங்களிலெல் லாம் புதுப் புத்தகங்களைத் தருவிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது மாவட்ட நூலக ஆணைக் குழுவினிடத்தில் இருக்கின்ற நிதி வசதி, அதனுடைய நிர்வாகச் செலவுக்குப் போதுமான அளவுக்கே இருக்கிறதனால், நூல்கள், மற்ற வைகள் வாங்க வேண்டிய அளவுக்கு அமையவில்லை. அண்மையில் கோடைக் கானலில் கூடிய நூலக ஆணைக் குழுத் தலைவர்களுடைய மாநாட்டில், நூலக செஸ்ஸை மூன்று பைசாவிலிருந்து ஐந்து பைசா அளவுக்கு உயர்த்துவதால் செஸ் தொகை ஓரளவு உயர்வதோடு, அரசாங்கம் தரும் ஈட்டு மானியத் தொகையும் ஓரளவு கூடுதலாகும்; அப்படி வருகின்றபோது, அதிகமான அளவு நூல்கள் வாங்க வசதிகள் ஏற்படும் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அது விரைவில் நடைமுறைப்படுத்தப்படும்போது, நூல்கள் வாங்கும் சூழ்நிலையை நூலக ஆணைக் குழுக்கள் பெறும். இப்பொழுது, பல்வேறு ஆணைக் குழுக்கள் நூல்கள் வாங்க முடியாத அளவுக்குத்தான் இருக்கின்றன. இந்தக் குறை பாட்டைப் போக்கத்தான் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

திரு. என். மருதாசலம் : தலைவரவர்களே, பெரும்பாலும் நூலகங்கள் நகரப் புறங்களில்தான் அமைந்திருக்கின்றன. எல்லோருக்கும் நூல்களைப் படிப்ப தற்கு வசதியாக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் பகுதிகளிலும் நூலகங்களை ஏற்படுத்த அரசாங்கம் உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நாம் கொண் டிருக்கிற கொள்கைப்படி, அதன் அடிப்படையில் 5,000 மக்கள் தொகைக்கு மேற்பட்ட இடங்களில் ஒரு கிளை நூலகம் ஏற்படுத்தப்படுகிறது. 1,000 முதல் 5,000 வரை மக்கள் தொகை உள்ள இடங்களில் வழங்கு நூலகங்களை அமைக் கலாம் என்று நாம் திட்டம் தீட்டி, அதற்கேற்ற முறையில் நடவடிக்கைகளை

மேற்கொண்டு வருகிறோம். இப்போது 13 மாவட்ட நூலகங்களும், 1,437 கிளை நூலகங்களும், 2,149 வழங்கு நூலகங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும் தேவைப்பட்டு வரும் இடங்களில் நிதிநிலைக்கு ஏற்றபடி புது நூலகங்கள் நிறுவப்படும் முயற்சி மேற்கொள்ளப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, in many local libraries in local library authority areas in Hosur and Denganikotah and other areas declared as local Telugu areas minimum books in Telugu and other languages are not supplied. May I know whether the Government will take steps to see that books are supplied for the use of the people there?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தப் பகுதிகளில் தெலுங்கு நூல்கள் இல்லாத குறை இருக்குமானால் அங்கு போதுமான நூல்கள் வழங்கப்படுவதற்கு நூலகப் பிரிவு இயக்குநரோடு தொடர்பு கொண்டு, தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

திரு. ந. நாச்சியப்பன் : தலைவரவர்களே, இப்போது மாவட்ட நூலகங்களுக்கு, ஊராட்சி ஒன்றியங்களிலே செஸ் நிதி வசூலிக்கிறார்கள். அந்த செஸ் நிதி நூலகங்களுக்குச் சரியாகப் போய்ச் சேரவில்லை என்று குறை சொல்லப்படுகிறது. ஆகவே, வசூலிக்கப்படுகின்ற செஸ் நிதி மாவட்ட நூலகங்களுக்கு நேரடியாகப் போய்ச் சேருவதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : செஸ் நிதியை வருவாய்த் துறை அதிகாரிகள்தான் வசூலிக்க முடியும். எனவே அவர்கள் மூலம் வசூலித்து, ஊராட்சி மன்றங்கள் நூலகங்களுக்கு வழங்குகின்றன. நேரடியாக நூலகங்களே வசூலிப்பதனால், சில குறைகள் போக்கப்படலாம். ஆனால் அவர்களால் வருவாய்த் துறை அதிகாரிகள் வசூலிக்கின்ற அளவுக்கு வசூலிக்க முடியாது. ஆகையால் வருவாய்த்துறை அதிகாரிகளே செஸ் நிதியை வசூல் செய்கின்ற நிலைமை இருக்கிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, மக்கள் அதிகமாக வாழக்கூடிய ஊராட்சிகளில் உள்ள நூலகங்களில், மக்கள் பயனடையும் வகையில், கலை, கலாச்சாரம், சரித்திரம் மற்றும் அறிவு வளர்ச்சிக்குச் சம்பந்தப்பட்டப் புத்தகங்கள் போதுமான அளவு இல்லாமல் இருக்கிறது. இந்தக் குறையைப் போக்க அரசு என்ன நடவடிக்கையை மேற்கொள்ளப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்படிப்பட்டக் குறைகளையெல்லாம் கண்டு, அதற்குத் தக்கப் பரிகாரம் தேடுவதற்காகத்தான் பொது மக்கள் பிரதிநிதிகள், மற்றும் முக்கியஸ்தர்கள் நூலக நிர்வாகக் குழுவில் இடம் பெறுகிறார்கள். ஊராட்சி மன்றப் பிரதிநிதிகள், நகராட்சி மன்றப் பிரதிநிதிகள், பொது மக்கள் பிரதிநிதிகள், மற்றும் கல்லூரிப் பேராசிரியர்கள் போன்றவர்கள் ஆங்காங்கே இருக்கின்ற நூலக நிர்வாகக் குழுவிலே இடம் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் அந்தந்தப் பகுதியில் என்னென்ன தேவை என்பதை உணர்ந்து சொல்கிறார்களோ அதற்கேற்ற வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.